**இலங்கை ஹதபிம அதிகாரசபை – 2017**

-----------------------------------------------------------------------------------------------

இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவுக்கு 2017 ஜூலை 07 திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 2026/45 இன் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2018 மே 17 திகதி அதிகார சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------------

தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முமைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை ஹதபிம அதிகாரசபையின் (இலங்கை பசுமை குடியிருப்பு நில அபிவிருத்தி அதிகாரசபை) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 76(இ) மற்றும் 80(இ) பிரகாரம், அறிவிக்கும் தினத்தில் இருந்து 12 மாதங்களுல் தேறும் என எதிர்பார்க்கும் சொத்துக்கள் மற்றும் தீர்ப்பதற்கு ஏற்பாடாகியுள்ள பொறுப்புக்கள் மாத்திரம் நடைமுறை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என இனங்காணப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 23,535,616 இற்கான ஊழியர் கடன் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாதவை என வகுக்கப்பட்டு காட்டியிருக்காததுடன் 12 மாதங்களுள் தேறக்கூடிய ரூபா 1,397,363 இற்கான பணிக்கொடை ஒதுக்கங்கள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03**

மீளாய்வாண்டின் போது அதிகார சபையின் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யும் கொள்கை மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த தாக்கத்தை கடந்த காலத்திற்குப் பொருத்தமான விதத்தில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டும். எனினும் அதிகார சபையினால் 2017 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதிக்கு மாத்திரம் கணக்கீட்டு கொள்கை மாற்றப்படுவதன் மூலம் ஏற்படும் தாக்கத்தை கடந்த காலத்திற்கு பொருத்தமானதாக கணக்கீடு செய்திருந்ததுடன் ரூபா 10,851,120 தொகை பெறுமதியான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

**(இ)** **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்கள் உரித்தாக்கும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்பை முற்றாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும் அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது ரூபா 1,462,100 தொகை கிரயத்தையுடைய 03 வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது சந்தைப்படுத்தும் பகுதியில் ஏற்பட்டிருந்த பண மோசடி ஒன்று தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 1,121,740 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதி ரூபா 1,899,508 எனக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முற்றாக பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக 2017 ஆண்டிற்காக மேலும் ரூபா 215,544 தொகை பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு அப் பெறுமதியினால் மிகையாகவும் மற்றும் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி சமமான தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 13,441,694 தொகை எனினும் அவை நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 13,723,193 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 281,499 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மூலதன மானியங்களின் மூலம் கொள்வனவு செய்திருந்த தேறிய பெறுமதி ரூபா 36,860 தொகையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது விற்பனை செய்திருந்த போதிலும் அப் பெறுமதியினை மூலதன மானியக் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) அதிகாரசபையின் நடைமுறைக் கணக்கு ஒன்று தொடர்பாக இறுதியாக தயாரித்திருந்த 2017 அக்தோபர் மாதத்தின் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்த நேரடி செலவு வைத்தல் ரூபா 11,500 தொகை மற்றும் நேரடி வரவு வைத்தல் ரூபா 8,000 தொகை எனினும் அம் மீதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் கணக்குகளில் விற்பனை பகுதிச் செலுத்த வேண்டிய கடன் என ரூபா 9,272,946 தொகை காணப்பட்ட போதிலும் விற்பனை பகுதியில் பெற வேண்டிய மீதிகளின் கீழ் ரூபா 9,609,773 தொகை எனக் காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 336,827 இற்கான விததியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஹதபிம அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டியவை என ரூபா 54,912,000 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் ஹதபிம அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்படாத காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் இருந்து பெற வேண்டிய மீதி ரூபா 2,094,280 தொகை என காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஒதுக்க மீதி ஆகிய ரூபா 64,947,902 தொகையில் 1978 ஆண்டு முதல் இடையறாது காணப்படும் 03 கணக்குகள் தொடர்பான ரூபா 2,081,413 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த ஒதுக்கம் பேணப்படுவதற்கான குறிக்கோள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. அதே போல் அம் மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடடிவக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டு முதல் பெற வேண்டிய மீதி ஒன்றென நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 50,998 இற்கான பதவியணிக் கடன் சீராக்கல் கணக்கின் மீதி 2017 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதி ரூபா 41,864,292 தொகையாக இருந்ததுடன் அவற்றில் 1 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலவீச்சினை சேர்ந்த ரூபா 169,838 தொகைக்கான 39 பெற வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேவை விட்டு அகன்றிருந்த 13 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 367,581 தொகை மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்த மற்றும் சேவை விட்டுச் சென்றிருந்த இரண்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 111,047 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கியிருந்த ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 2,328,439 தொகை பெறுமதியான 307 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2011 செப்டம்பர் 22 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் டீஎம்எஸ்/ஈ/ஐ/14/05/15(VOLI) கொண்ட கடிதத்தின் பிரகாரம் வினைத்திறமைப் படி செலுத்துவதற்கு பொருத்தமான நடைமுறை ஒன்று தயாரித்து மீண்டும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் படி அறிவித்திருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்படாமல் 2017 ஆண்டிற்கான வினைத்திறமை படிகள் என ரூபா 397,006 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் நிதி விளைவுகள் ரூபா 684,322 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,359,802 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 675,480 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. விற்பனை பகுதியின் மிகை ரூபா 1,527,490 இனால் குறைந்திருந்தமை மேற்கூறிய நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களில் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் ரூபா 23,704,832 தொகையான மிகை 2015 வருட இறுதியில் ரூபா 798,107 வரை இடையறாது குறைந்துள்ளது. எனினும் 2016 ஆண்டின் போது ரூபா 1,359,801 தொகை வரை மீண்டும் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 684,322 வரை மீண்டும் குறைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 67,807,816 தொகையாக இருந்த பங்களிப்பு தளம்பல் அடைந்திருந்த போதிலும் 2017 வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 73,010,089 தொகை வரை அதிகரித்திருந்தது.

### 3.2 அதிகார சபைக்கு எதிராக மற்றும் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

நிறுவனத்தில் கடமையாற்றி வந்த 04 ஊழியர்களின் சேவையை இடைநிறுத்தியமையினால் அதிகார சபைக்கு எதிராக நீதிமன்றில் 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் விற்பனை பகுதியில் மோசடி ஒன்று காரணமாக ரூபா 1,696,740 இற்கான தொகையொன்று அறவீடு செய்வதற்காக அதிகார சபையினால் முன்னைய ஊழியர் ஒருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

**செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான அதிகார சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4 பந்தியின் பிரகாரம் உட்படுத்தப்பட வேண்டிய ஆக்கக் கூறுகள் மற்றும் விற்பனை பிரிவு தொடர்பான செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1972 இன் 11 இலக்கங் கொண்ட அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரகாரம், அதிகார சபைக்கு 05 முக்கிய கருமங்கள் சாட்டப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டின் போது அபிவிருத்தி விடயங்களுக்காக ரூபா 55,600,000 தொகை செலவிடப்பட்டு மண் பாதுகாப்பு விடயங்கள் மற்றும் நீர்பிடிப்பு மேட்டுப்பகுதி முகாமைத்துவம் தொடர்பாக அலுவல்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் விவசாயம் சார் பல்வகைப்படுத்தல் மற்றும் விவசாயம் சார் உற்பத்திப் பொருட்களை தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் விவசாயம் சார் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்புக்கள் அபிவிருத்திக்காக பொறித்தொகுதிகள் உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுவுதல் அவற்றை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல் ஆகிய கருமங்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(ஆ) விற்பனை செயற்திட்டம்**

நச்சு இன்றிய விவசாய உற்பத்திப் பொருட்களை மேம்படுத்துதல் மற்றும் கிராமிய விவசாய உற்பத்தி பொருட்களுக்காக விவசாயிகளுக்கு உயர்ந்த விலை ஒன்று பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் விற்பனை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் விற்பனை செய்யும் விவசாயம் உற்பத்திப் பொருட்கள் நச்சு இன்றியவையா என பரிசோதனை மேற்கொள்வதற்கான செயல் முறைமை ஒன்று காணப்படாததுடன் கிராமிய விவசாய உற்பத்தி பொருட்களின் விலையை விட கூடிய விலைக்கு மத்திய சந்தையில் இருந்து விவசாய உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்திருந்தனர்.

(இ) அதிகார சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 03 செயற்திட்டங்களில் 05 செயற்பாடுகள் தொடர்பாக நெருங்கி இருக்காத நிதி முன்னேற்ம் 24 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஈ) 2017 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்தி வேறு இரண்டு செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 27,500,000 இற்கான தொகையொன்று பண்ணைக்கு வெளியே மண்பாதுகாப்பு மற்றும் அனர்த்த நீர் முகாமைத்துவத்திற்கான செயற்திட்டமொன்றிற்காக மாற்றப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி முன்னேற்றம் ரூபா 5,600,000 தொகை எனப்படும் 20 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை கொத்மலை மற்றும் பல்லேகலே விவசாய பண்ணைகள் இரண்டிலும் நட்டம் ரூபா 1,166,612 தொகையாக இருந்ததுடன் 2015 மார்ச் 04 திகதிய 07/04/04 இலக்கங் கொண்ட நீர்பாசன மற்றும் விவசாய அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் அந்த 02 விவசாய பண்ணைகளுக்கும் உற்பத்தி பொருட்கள் மற்றும் வருமானங்கள் என்பவற்றை அறுதியாக இனங்கண்டு மாதாந்த பங்கீட்டுடனான வர்த்தக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பண்ணைகளை இலாபம் உழைக்கும் நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும் இவ் அறிக்கை திகதி வரை அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.12 இன் பிரகாரம் நலன்புரி திட்டங்களுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும் அதிகார சபையினால் நிறுவப்பட்டிருந்த இடர் ஒதுக்க நிதியத்திற்காக அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்காததுடன் வேலை செய்யும் ஒரு நாளுக்கு ரூபா 250 வீதம் ஒதுக்கப்பட்டு 2011 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை அந்த நிதியத்திற்காக ரூபா 613,581 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் தொடர்பாக நடைமுறையொன்று மற்றும் தேர்வு முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விற்பனை செயற்திட்டத்தின் செயலாற்றுகை பரிசோதனை செய்த போது 2016 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆண்டின் போது மரக்கறி விற்பனை எண்ணிக்கை 15681 கிலோகிராமினாலும் பழங்களின் விற்பனை எண்ணிக்கை 12178 கிலோகிராமினாலும் தேங்காய் விற்பனை 19035 காய்களினாலும் குறைந்திருந்ததுடன் கோழி இறைச்சி விற்பனையொன்று நடைபெற்றிருக்கவில்லை. மேலும் பிரதான விற்பனை பொருட்களின் வகைப்படுத்தல் 06 இலும் விற்பனைத் தொகை 09 சதவீதம் முதல் 44 சதவீதம் வரை வீச்சில் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2017 ஆண்டு தொடர்பாக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இலங்கை ஹதபிம அதிகார சபையினால் மண் பாதுகாப்பு முன் மாதிரிகள் பராமரித்தல் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பொறுப்புக்கள் சாட்டப்பட்டு இருக்காததுடன் அலகுகளின் முகாமையாளர்கள்/ வலய முகாமையாளர்களினால் அவை தொடர்பாக தொடர்செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

2005 ஆண்டின் போது ரூபா 346,225 இற்கான செலவில் பல்லேகலே விவசாய பண்ணையில் நிர்மாணித்திருந்த நிரந்தர கட்டிடமொன்று மற்றும் விற்பனை நிலைய கட்டிடமும் 2011 ஆண்டின் போது ரூபா 535,100 தொகை செலவிடப்பட்டு கொத்மலை விவசாய பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பயிற்சி வழங்கும் நிலையம் மற்றும் பண்ணையில் காணப்பட்ட பழைய குதிரை தொழுவத்தை சேர்ந்த தரை நீண்ட காலம் முதல் எதுவித தேவைக்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

**4.5 முறைசார் விதமாக உரித்தாக்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்**

அதிகார சபையினால், உரித்தாக்கப்பட்டிருக்காத காணி ஒன்றில் 2014 ஆண்டின் போது ரூபா 5,999,835 தொகை செலவிடப்பட்டு விற்பனை நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மே மாதம் அளவிலும் அக் கட்டிடம் செயற்படாது காணப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்டுகின்றன.

(அ) ஹதபிம அதிகார சபை மற்றும் விற்பனவு மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முறையே 11 பதவிகளில் 15 வெற்றிடங்களும் விற்பனை செயற்திட்டத்தில் 04 பதவிகளில் 07 வெற்றிடங்களும் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அதிகார சபையை சேர்ந்த இரண்டு விவசாய பண்ணைகளின் விடயங்களுக்காக நிரந்தர பதவியணி ஒ்னறு அங்கீகரித்திருக்காமல் ஹதபிம அதிகார சபைக்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியைச் சேர்ந்த உத்தியோத்தர்களினால் பண்ணைகளில் அலுவல்களும் நடாத்தப்பட்டு வந்துள்ளது.

(ஆ) உயர்மட்ட முகாமைத்துவத்தின் 02 பதவிகளுக்காக 2005 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 13 வருடங்கள் இடைநிலை அடிப்படையில் உத்தியோகத்தர்களாக சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அப் பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்காக கடந்த 05 வருடங்களில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் 30 சதவீதம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், 2017 ஆண்டின் போது அதிகார சபையின் 03 ஊழியர்கள் மற்றும் விற்பனை பகுதியின் 27 ஊழியர்கள் 8 மணித்தியாலங்களை விட குறைவாக மணித்தியால எண்ணிக்கை ஒன்றினை மேவகை செய்திருந்தது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 71(i)(அ) பிரகாரம் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பூர்வாங்க அதிகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் விற்பனை செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த விற்பனை உதவியாளர் பதவியை சிட்டை சேகரிப்பவர் என மாற்றப்பட்டிருந்ததுடன் 21 உத்தியோகத்தர்கள் அதற்காக சேர்க்கப்பட்டிருந்தனர்.

**5. நிலைபெறுதகு அபிவிருத்தி**

2017 ஆகஸ்ட் 14 திகதிய எஸ்பீ/எஸ்பீ/எஸ்பீஜீ/17 இலக்கங் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபெறு தகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரழ்'' பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை ஹதபிம அதிகார சபையினால் தமது நோக்கெல்லையின் கீழ் வரும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

**6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 உள்ளகக் கணக்காய்வு**

2009 ஜுன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்திருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு அலுவலகளுக்காக ஒரு அலுவலகர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய முறைமை பகுப்பாய்வு, செயலாற்றுகை பகுப்பாய்வு மற்றும் விஷேட விசாரணைகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 6.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயல்முறை

### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 அரச பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு புறம்பாக விற்பனை நிலையத்தில் பயன்படுத்துவதற்காக ரூபா 504,033 தொகை கிரயத்திற்காக பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2 வழிகாட்டல்களின் பிரகாரம் குறைந்தது மூன்று வருட காலத்திற்காக எதிர்பார்க்கும் பெறுகைகள் விடயங்களுக்காக பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் அதிகார சபையினால் அவ்வாறான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 30,399,000 தொகை பெறுமதியான பெறுகைகள் திட்டமிட்டிருந்த போதிலும் பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.2 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகைகள் நேரசூசி ஒன்று தயாரித்திருக்கவில்லை.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.1 பந்தியின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீட்டுடன் பாதீட்டு ஐந்தொகை, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பாதீட்டு மூலதனச் செலவு அறிக்கை ஒன்றுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2003 ஜுன் 02 பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு அறிக்கை திறைசேரிக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 வருடாந்த அறிக்கைகள் சபையில் சமர்ப்பித்தல்

2006 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பிரகாரம் வருடாந்த அறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் 2016 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை 2018 ஜுன் அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

2004 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,094,280 தொகை தொடர்பாக 2010 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பாக குழுக்கூட்டத்தில் கவனம் செலுத்தி தீர்க்க வேண்டுமென விதிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 30 திகதி வரை அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6.6 சுற்றாடல்சார் பொறுப்புக்கள்

இலங்கை ஹதபிம அதிகார சபையின் முன்மாதிரி சொற்தொடர் ''பாதுகாப்போம் பூமி'' எனினும் அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படும் விற்பனை நிலையத்தின் கழிவுப் பொருட்களை உக்கக் கூடியவை உக்காதவை என வகுக்கப்படாமல் கொத்மலை பண்ணைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் சுற்றாடல்சார் சிக்கல்கள் ஏற்படக் கூடும் என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரச் சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சில கணக்கீட்டு நிமயங்களுக்கு இணங்கியிருக்காமை. |
| (ஆ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளின் கட்டுப்பாடு | பல வருட காலம் முதல் காணப்படும் கடன் மீதியை தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (இ) | பதவியணி நிருவாகம் | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆள்சேர்த்தல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்றின் அடிப்படையில் செயற்பட்டிருக்காமை. |
| (உ) | பெறுகைகள் | அரச பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு புறம்பாக செயற்பட்டிருக்காமை. |
| (ஊ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை. |